*118. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : ஈரோடு நகரில் விரைவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நகராட்சி மன்றத்திற்கு ஏதாவது ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கம் ஆலோசனை கூறுவதில்லை. நகர மன்றம் கோரிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அப்படிக் கோரிக்கை சமர்ப்பிக்கும்போது, உரிய முறையில் கவனிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : திருப்பூர் சட்டசபை மெம்பர் எல்லா முனிசிபாலிடிகளுக்காகவும் வழக்குப் போடுகிறாரே, அதற்கு என்ன காரணம் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அவர்களுக்குள்ள அக்கறையைக் காட்டுகிறது. (சிரிப்பு).

மீன் பாசி ஏலம்

*119 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் சிறுப்பாசன குளங்களில் உள்ள மீன் பாசி ஏல உரிமையை பஞ்சாயத்துக்களுக்கு விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சிகளிடம் நிலைத்துள்ள பொது நீர் நிலைகளிலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 85 (1) பிரிவின் கீழ், ஊராட்சிகளிடம் நிலைத்துள்ளவையும், ஊராட்சிகளினால் உண்மையில் பேணிவரப்படுபவையுமான பாசன வாயில்களிலும், ஊராட்சிகளுக்குத் தற்போது பாசிக்குத்தகை உரிமை உண்டு. பிற பாசன வாயில்களில் ஊராட்சிகளுக்கு பாசிக்குத்தகை உரிமை இல்லை. ஊராட்சிகளிடம் நிலைபெறாத அல்லது ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படாத சிறு பாசன வாயில்களின் பாசிக்குத்தகை உரிமைகளை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : ஏரிகளில் இருக்கும் பாசிகளை இப்பொழுது ஏலம் போடுகிறார்கள். ஏலம் எடுத்தவர்கள்தான் அதை எடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏலம் எடுக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் அதை எடுப்பது இல்லை. ஆனால், வருஷா வருஷம் அந்த ஏரிகளில் உள்ள மண்ணைத் தூறு வாறும் அளவுக்கு, வண்டல் என்ற முறையில் எடுத்து விடுவார்களானால், அது சர்க்காருக்கு லாபகரமாக இருக்கும். ஏலம் போட்டு விடுவதால், பணம் வாங்கினவர்கள் தான் வண்டல் மண்ணை எடுக்க வேண்டும் என்ற முறை இருப்பதால், வண்டல் மண் எடுக்கப்பட முடியாமல், ஏரிகள் தூர்ந்து விடுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வழிவகை உண்டா ?

1968 மார்ச் 1]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மூலக்கேள்வி ஏரிகளிலிருந்து பாசி எடுப்பது பற்றியது. வண்டல் மண் எடுப்பது பற்றி விவரங்கள் வேண்டுமானுல் தனிக் கேள்வி போடலாம்.

திரு. எஸ். ராமசாமி நாயுடு : பாசிச் சுதந்திரமானது. முன்னுல் ஏரிகள் சில பட்டாதாரர்களுக்கு மட்டுமே சொந்தப்பட்டிருந்த நேரத்தில், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படி பல ஏரிகளைச் சொந்த மாக வைத்துக்கொண்டிருந்த பட்டாதாரர்கள் தங்களுக்குள்ள நிலங்களை யெல்லாம் விற்றுவிட்டு, வெறும் பாசி பாத்தியதையை மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறுர்கள். அப்படிப்பட்ட இடங்களில் ஆர்ஜிதம் செய்தோ அல்லது உரிமையை ரத்து செய்தோ, பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சட்ட விதிகளின் கீழ் இன்னின்னது இன்னின்னுருக்கு உரிமை என்று வகுக்கப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது தவருக வைத்துக்கொண்டிருப்பதாக குறை சொல்வார் களானுல், அதுபற்றி எழுதி அனுப்பினுல், பரிசீலிக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : குளங்களில் பாசி ஏலத்தின் மூலமும், மீன் ஏலத்தின் மூலமும் வரும் வருவாயை, அதே குளங்களில் தூறு எடுக்கப் பயன்படுத்துவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப் பராமறிக்கின்றவர்கள் அந்தச் செலவுகளுக்கான தொகையை அதிலிருந்து செலவழித்துக் கொள்ளலாம் என்பதற்கான உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன.

திரு. கே. போஜன் : பாசிக் குத்தகை மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மூன்று நான்கு துறைகள் இதிலே செயல்பட்டு வருகின்றன. விவரம் இல்லே.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்தப் பாசிக் குத்தகை, மீன் குத்தகை இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள் காலத்திலெல்லாம் விவசாயிகள்தான் இதை அனுபவித்துக்கொண் டிருந்தார்கள். இப்பொழுது குத்தகைக்கு விடுவதனுல் விவசாயிகளுக்குச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே குத்தகைக்கு விடாமல், விவசாயிகளே அதை அடைந்துகொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : குடியாட்சி நடைபெறுகிற முறைப் படி அமைக்கப்பட்டிருக்கக்கூடிய விதிகளுக்கு உட்பட்டு, அவைகள் ஏலம் விடப்படும்.

திரு. கே. விஞயகம் : பஞ்சாயத்து எல்லேக்குள் இருக்கிற இந்த ஏரி களில் மீன் பிடிக்கிற உரிமை இதுவரை மக்களுக்கு இருந்தது. இப்போது சட்டப்படி பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. சின்னசாமி : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், மூலக் கேள்வி பாசி பிடிப்பதைப் பற்றியது. இதில் மீன் பிடிப்பது பற்றிக் கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வி பிஷ்ஷரீஸ் ரைட் பற்றியது தான். இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லே.

திரு. கே. விஞயகம் : பி.டபுள்யூ.டி. டாங்குகளைப் பொறுத்தவரை அரசாங்கமே தாசில்தார் மூலமாக ஏலம் விடுகிறதே, அதோடு பிஷ்ஷரீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் வேறு இருக்கின்றன. இதனுல் ஒருவருக் கொருவர் சண்டை ஏற்படுகிறதே. ஆகவே, பஞ்சாயத்து ஆக்டையே திருத்தி முன்போலவே விட்டுவிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1961-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாங்க ஆணையின் கீழ் இந்த முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது கோளாறு இருந்தால் அதை எழுதி அனுப்பினால் அந்தச் சங்கடங்களை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறித் துணித் தேக்கமும், நெசவாளர் நெருக்கடி நிலையும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு வேண்டி ஒரு முன்னறிவிக்கையை கொடுத்திருக்கிறேன்.—

"திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் அதிகம் தேங்கியிருப்பதாலும் பல நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பாங்கு கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் கைத்தறிகள் செயல்படாமல், நெசவாளர்கள் வேலை இல்லாமல் இருப்பது பற்றி விவாதிக்க"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பது அரசாங்கத்தினுடைய அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களில் ஒன்றாகும். அந்தக் கருத்தை இப்போது பேரவையின் முன் நடைபெறுகிற பொது விவாதத்தில் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இந்தக் கருத்தையே சட்டப்பேரவை 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர வாய்ப்பு இருந்திருக்கும். இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரால் கொடுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் உயிர் நாடியையே இந்தப் போக்கு மாற்றிவிடுவதாகத் தெரிகிறது. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அறிந்து அதைக் கொடுக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மேட்டுப்பாளையம்–உதகை இருப்புப் பாதை அகற்றப்படுவதைத் தடுத்தல்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் நீலமலைத் தொடரில் இயற்கை எழிலுடன் விளங்கும் உதகை செல்லும் மேட்டுப்பாளையம்—உதகை புகைவண்டிப் பாதையை பொருளாதார காரணங் காட்டி எடுத்துவிட இந்தியப் பேரரசு முயற்சிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.